

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை)

# பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

## (2001 - 2002)

## ஆறாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 2 - MAY 2002)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பன்னிரெண்டாவது சட்டமன்றப் பேரவை)

# பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
## (2001 - 2002)

## ஆறாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை - 600 009

53-496—1


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| குழு உறுப்பினர்கள் | iii |
| அறிக்கை | 1-2 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*(பன்னிரெண்டாவது பேரவை)*

## பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
## (2001-2002)

***(2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் நியமனம் செய்யப் பெற்றது)***

### தலைவர்

1. திரு. பி.எம். நரசிம்மன்
   அரசு தலைமை கொறடா

### உறுப்பினர்கள்

2. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
3. திரு. ப. ஆண்டிவேல்
4. திரு. சொ. கருப்பசாமி
5. திரு. மே. ப. காமராஜ்
6. திரு. சி. சண்முகம்
7. திரு. டி. சுதர்சனம்
8. திரு. வி.ஏ. செல்லையா
9. திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்
10. திரு. டி.பி.எம். மைதீன்கான்
11. திரு. ஜெக. வீரபாண்டியன்

### செயலகம்

| | | |
|---|---|---|
| திரு. செ.சு ஜானகிராமன் | .. | முதன்மைச் செயலாளர் |
| திரு. வெ. இராசாராமன் | .. | செயலாளர் |
| திருமதி பானுமதி ஆனந்தராஜன் | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அஹமத் | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் | .. | சார்புச் செயலாளர் |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2001-2002)

## ஆறாவது அறிக்கை

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை-600 009.

### முகவுரை

2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு தனது ஆறாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

### குழுவின் கூட்டம்

2. 2001-2002 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 2002 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8 ஆம் நாள் சென்னையில் கூடியது.

3. அக்கூட்டத்தில் நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகள்/ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் காலதாமதமாக பேரவையில் வைக்கப்பட்டது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட காரணங்களை முழுமையாக ஏற்காமல் சம்பந்தப்பட்ட துறைகளிடம் இருந்து விளக்கங்கள் கேட்டதையொட்டி அத்துறைகள் அனுப்பியுள்ள விளக்கங்களைக் குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

### தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான 26-வது ஆண்டறிக்கை.

4. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான 26-வது ஆண்டறிக்கை 4 மாதங்கள் 26 நாட்கள் காலதாமதமாக 27-8-2001 அன்று பேரவைமுன் வைக்கப்பட்டது. 5-11-2001ல் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட அறிக்கையை குழு ஆய்வு செய்து துறையிடமிருந்து எழுத்து மூலம் விளக்கம் கேட்கலாமென குழு முடிவு செய்தது.

5. அதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையிலிருந்து 21-12-2001-ல் பதில் பெறப்பட்டது. துறை அனுப்பிய விளக்கம் பின்வருமாறு:—

(அ) சட்டவழித் தணிக்கையாளர்கள் திரு. அருணாபாலா மற்றும் சதா என்ற நிறுவனத்தை மைய அரசின் கம்பெனி சட்ட வாரியத்தால் 27-3-2000 அன்று நியமனம் செய்யப்பட்டது. தணிக்கையாளர்கள் தங்களின் சென்னை அலுவலகம் மூடப்பட்டதின் காரணமாக தணிக்கை நியமனத்தை ஏற்க இயலவில்லை என்று 23-6-2000 அன்று தெரிவித்தனர்.

எனவே, 28-6-2000 அன்று தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், மைய அரசின் சட்ட வாரியத்திற்கு புதிய சட்டவழித் தணிக்கையாளரை நியமனம் செய்ய கேட்டுக் கொண்டது. முதன்மை கணக்காய்வுத் தலைவரின் அறிவுரையின்படி, மைய அரசின் சட்ட வாரியம் 27-9-2000 அன்று புதிய சட்ட வழித் தணிக்கையாளராக திரு. ரகு மற்றும் முரளி என்ற நிறுவனத்தை நியமனம் செய்தது. எனவே, சட்டவழித் தணிக்கையாளரை நியமித்ததில் ஏற்பட்ட 6 மாத காலதாமதமே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பட்ட காலதாமதத்திற்குக் காரணமாகும்.

6. மேற்கண்ட விளக்கம் படிக்கப் பெற்று சிறிது நேர விவாதத்திற்குப்பின் துறை அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அழைத்து நேரில் விசாரிக்கலாம் என குழு முடிவு செய்தது.

7. 2002 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் தேதியன்று உதகமண்டலத்தில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

உதகமண்டலம்,
29-1-2002.

**பி.எம். நரசிம்மன்,**
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.